# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க,
## கல்விக் கல்லூரிகள் சட்டம்

---

*[1986, செப்ரெம்பர் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986, செப்ரெம்பர் மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 90* *தபாற் செலவு : சதம் 75*

**1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கல்விக் கல்லூரிகள் சட்டம்**

*[1986, செப்ரெம்பர் 23 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*ச,வ.—ஓ. 15/86*
*1799*

**கல்விக் கல்லூரிகளைத் தாபிப்பதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்பு பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டமானது 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கல்விக் கல்லூரிகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று இது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

கல்விக் கல்லூரிக் கட்டளை.

2. (1) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், (இது இதனகத்துப் பின்னர் "கல்விக் கல்லூரிக்கட்டளை" ஒன்றெனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சர்—

(அ) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின்கீழ், கற்பித்தல் தகைமைகளாக அங்கீகரிக்கப்பட்டவையும், அக்கட்டளையில் குறித்துரைக்கப்படுவனவுமான நிறுவகத்தின் பட்டங்களையும், திப்புளோமாக்களையும் ஏனைய கல்விச் சிறப்புக்களையும் வழங்குவதற்கு இட்டுச் செல்லுதற்கான கற்கை நெறிகளை நடாத்தும் நோக்கத்துக்காக ,(இதனகத்துப்பின்னர் கல்லூரி ஒன்றெனக் குறிப்பீடு செய்யப்படும்) கல்விக் கல்லூரியொன்றைத் தாபிக்கலாம் ;

(ஆ) அத்தகைய கல்லூரிக்குப் பெயரொன்றைக் குறித்தொதுக்கலாம் ; அத்துடன்

(இ) அத்தகைய கல்லூரி அமையும் இடமாக இருக்கவேண்டிய அமைவிடத்தை அல்லது இருப்பிடத்தைக் குறித்துரைக்கலாம்.

(2) கல்விக் கல்லூரிக் கட்டளையொன்று எந்நேரத்திலும், அமைச்சரினால் திருத்தப்படலாம், வேறுபடுத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் அத்துடன் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் அத்தகைய கட்டளைக்கான திருத்தம், மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும் ; அத்துடன், அதன் பின்னர் இயன்றளவு விரைவாக அது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கல்விக் கல்லூரிக் கட்டளையொன்று வலுவுக்கு வந்ததன்மேல், கல்விக் கல்லூரியொன்று அக்கட்டளையினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரின்கீழ் தாபிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2—எ 091714—2,990 (86/07)

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்படும் கல்லூரி ஒவ்வொன்றும் நிறுவகத்தோடு இணைக்கப்பட்ட கல்லூரியொன்றாகப் பதியப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

கல்விக் கல்லூரிகள் சபை.

3. அமைச்சரின் பணிப்புக்கமைவாக, கல்லூரிகளின் முகாமைத்துவ அதிகாரசபையாக இருக்கவேண்டியதான (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கல்விக் கல்லூரிகள் சபையொன்றிருத்தல் வேண்டும்.

சபையின் அமைப்பு.

4. (1) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்—

(i) கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ii) சபையின் பிரதான ஆணையாளர் ; அத்துடன்

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படும் ஏனைய ஆறு பகிரங்க அலுவலர்கள் ;

(2) ஓராமுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட செயலாளர், சபையின் தவிசாளராதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்பதன்மூலம் அல்லது பகிரங்க அலுவலரொருவராக இல்லாதொழிவதன் மூலம் தமது பதவியை முன்னரே வறிதாக்கினலொழிய, அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நான்கு ஆண்டுகாலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் :

ஆயின், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் அரைவாசிப் பங்கினர் ஒவ்வொரு இரண்டாவது வருடத்திலும் இளைப்பாறுதல் வேண்டும். அத்தகைய இளைப்பாறுகையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, அமைச்சரால் குறித்துரைக்கப்பட்டவாறு சபைக்கு முதலில் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களினதும் பதவிக்காலமானது, அவர்கள் சபைக்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலமொன்று முடிவடையும்போது முடிவுறுதல் வேண்டும்.

(4) (அ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சபை உறுப்பினர் ஒருவர் இறக்கின்றவிடத்து அல்லது பகிரங்க அலுவலரொருவராக இல்லாதொழியுமிடத்து, எந்த உறுப்பினர் இறக்கின்றாரோ அல்லது பகிரங்க அலுவலரொருவராக இல்லாதொழிகின்றாரோ, அந்த உறுப்பினரின் இடத்தில் உறுப்பினரொருவராக இருக்கவென அமைச்சரானவர் வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(ஆ) இந்த உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் சபை உறுப்பினர், முன்னரே தமது பதவியிலிருந்து விலகினால் அல்லது இறப்பதன் மூலம் அல்லது பகிரங்க அலுவலரொருவராக இல்லாதொழிவதன்மூலம் தமது பதவியை முன்னரே வறிதாக்கினலொழிய அவர் எவ்வுறுப்பினருக்குப் பின் வந்தாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அமைச்சரானவர் அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறு பகிரங்க அலுவலரொருவரை நியமிக்கலாம்.

(6) சபையின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும் எந்தப் பதவியின் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினரொருவராக வந்துள்ளாரோ அந்தப் பதவியை வகிக்கும் வரையில் தமது பதவியை வகித்தல் வேண்டும்.

5. மூன்றும் பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவத்தின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :— சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.

(அ) கல்லூரிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களைக் காலத்துக்குக் காலம் தயாரித்தலும், அத்தகைய திட்டங்களை அமைச்சரின் அங்கீகாரத்துக்கெனச் சமர்ப்பித்தலும் ;

(ஆ) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறான அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் ;

(இ) ஒவ்வொரு கல்லூரி தொடர்பாகவும் செய்யப்படவேண்டிய நிதிசார் ஏற்பாடுகள் பற்றிக் காலத்துக்குக் காலம் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஈ) நிறுவகத்தின் ஒருப்பாட்டுடன், கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை, விதி மூலம் விதந்துரைத்தல் ;

(உ) ஒவ்வொரு கல்லூரிக்கும் அனுமதிப்பதற்காக மாணவர்களைத் தேர்ந்தெடுத்தல் ;

(ஊ) நிறுவகத்தின் ஒருப்பாட்டுடன், ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்படவேண்டிய கற்கை நெறிகளையும், செய்முறைப் பயிற்சியையும் தீர்மானித்தல் ;

(எ) நிறுவகத்தின் பட்டங்களை, திப்புளோமாக்களை அல்லது கல்விச் சிறப்புக்களை வழங்குவதற்கு இட்டுச்செல்லும் பரீட்சைகளில் தேர்ச்சியடைந்துள்ள மாணவர்களினால், அத்தகைய ஏதேனும் பட்டம், டிப்புளோமா அல்லது கல்விச்சிறப்பு வழங்கப்படுவதற்கு முன்னர், நிறைவேற்றப்படவேண்டிய மேலதிக நிபந்தனைகளை, நிறுவகத்தின் ஒருப்பாட்டுடன் தீர்மானித்தல் ;

(ஏ) கல்லூரிகளைத் தாபிப்பதற்கு உதவி வழங்குதலும் அதற்கு வசதியளித்தலும் ;

(ஐ) ஆசிரியர்களையும், மாணவர்களையும் இடமாற்றும் முறைமூலம் அல்லது வேறுவகையில் கல்லூரிகளுக்கான குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய நிறுவகங்களோடு கூட்டிணைத்தலும், ஒத்துழைத்தலும் ;

(ஓ) கல்லூரிகளின் உள்ளக அமைப்பைத் தீர்மானித்தல் ;

(ஓ) கல்லூரி ஒவ்வொன்றினதும் நோக்கத்துக்குத் தேவைப்படக்கூடியவாறான கல்வித்துறைப் பதவிகளையும், வேறு பதவிகளையும் உருவாக்குவதற்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஔ) கல்லூரிகளில் நிலைத்துள்ள இணையுரிமைப் பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும், நிதியுதவிகளையும், பதக்கங்களையும் அத்துடன் வேறு பரிசுகளையும் நிறுவுதலும், வழங்குதலும் ;

(க) கல்லூரிகளின் பணியாட்டொகுதியினதும், மாணவர்களினதும் வதிவிடத்தையும், ஒழுக்காற்றையும், நலனையும் ஒழுங்குபடுத்துதல் ;

(ங) விதிகளுக்கிணங்க, ஏதேனும் ஒழுக்காற்று மீறுகைக்காக, எவரேனும் மாணவர்களை விலக்குதல் ;

(ச) கல்லூரிகளில் கற்கைநெறிகளையும் ஏனைய சேவைகளையும் ஏற்பாடு செய்வதற்கான கட்டணங்களை அதற்கென ஏற்பாடு செய்கின்ற எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க, கோரிப் பெற்றுக் கொள்ளுதல் ;

(ஞ) பாடவிதானங்களை மதிப்புயர்த்துவதன்மூலம், கற்பித்தல் முறைகளையும் அவற்றின் வேறு நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதன்மூலமும், கல்லூரிகளின் சுற்றுப்புறத்திலுள்ள அப்பாடசாலைகளின் கல்வித்தராதரத்தை முன்னேற்றுதல் ;

(ட) கல்லூரிகளினது அலுவல்களின் முகாமை தொடர்பாக விதிகளை ஆக்குதல் ; அத்துடன்

(ண) சபையின் அபிப்பிராயப்படி, அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையான அல்லது உசிதமானவையான அல்லது இடைநேர்விளைவானவையான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

**சபையின் கூட்டங்கள்.**

6. (1) செயலாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். செயலாளர் சமூகமாயிராதபோது, சமூகமாயிருக்கும் உறுப்பினர்கள், அவர்களுக்கிடையேயிருந்து, அத்தகைய கூட்டங்களில் தலைமைதாங்குவதற்காக, உறுப்பினரொருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், சபையின் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோராயிருத்தல் வேண்டும்.

(3) சபையின் கூட்டமெதிலும் முடிவெடுத்தற்கான எல்லா விடயங்களும், சமூகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குக் கொண்டு முடிவுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாயிருக்கின்ற விடயத்தில் தவிசாளர் அல்லது சபையின் கூட்டமெதிலும் தலைமை தாங்கும் எவரேனும் உறுப்பினர், தமது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பாகவும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பாகவும் அதன் சொந்த நடவடிக்கை முறையினை ஒழுங்குபடுத்தலாம்.

சபையின் பிரதான ஆணையாளர்.

7. (1) (இதனகத்துப்பின்னர் " பிரதான ஆணையாளர் " எனக் குறிப்பிடு செய்யப்படும்) பிரதான ஆணையாளரொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். இவர் சபையின் பிரதான நிருவாக அலுவலராகவும், கல்லூரிகளின் கண்காணிப்பாளராகவும் இருத்தல் வேண்டும்.

(2) பிரதான கண்காணிப்பாளர், சபையின் பொதுவான பணிப்புரைக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைய, கல்லூரிகளின் நிருவாகத்தினைக் கண்காணித்தலும் சபையின் பணியாட்டொகுதியின் கட்டுப்பாட்டுக்கும், பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) பிரதான ஆணையாளர், சபையினால் அவருக்குக் கையளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

அரசுக்குரித்தாக்கப்பட்ட சில ஆதனங்களைப் பிரதான ஆணையாளர் நிருவகித்தல்

8. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உதவியளிக்கப்பட்ட பாடசாலைகளும், பயிற்சிக் கல்லூரிகளும் (குறைநிரப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் அரசுக்கு உரித்தாக்கப்பட்டனவும், ஏதேனும் கல்லூரியின் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டனவுமான எல்லா அசைவற்ற ஆதனங்களும், வேறு ஏதேனும் சட்டத்தில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், அந்தச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கமொன்றுக்காகப் பயன்படுத்தப்பட்டனவென்றும் பயன்படுத்தப்படவேண்டுமென்றும் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனமும், பிரதான ஆணையாளரினால், அரசின் சார்பாகவும் அரசுக்காகவும் முகாமைப்படுத்தப்படுதலும், நிருவகிக்கப்படுதலும் வேண்டும்.

கல்லூரிகளின் தலைவர்கள்.

9. (1) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் கல்விக் கல்லூரிக் கட்டளையொன்றினால் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு கல்லூரிக்கும் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) கல்லூரியொன்றின் தலைவர், கல்லூரியின் பிரதான கல்வி அலுவலராகவும் நிருவாக அலுவலராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் சபையின் பொதுவான பணிப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைய பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாதலும் வேண்டும் :—

(அ) அதன்சார்பில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளுக்கிணங்க மாணவர்களைக் கல்லூரிக்கு அனுமதித்தல் ;

(ஆ) நிறுவகத்தின் ஒருப்பாட்டுடன் சபையால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கல்விச் சிறப்புக்கூறுகளில் போதனைக்கும், பயிற்சிக்கும் ஏற்பாடு செய்தல் ;

(இ) கல்லூரியில் ஒழுக்காற்றைப் பேணிவருதல் ;

(ஈ) கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு வாழ் வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(உ) கல்லூரியின் பணியாட்டொகுதியினதும், மாணவர்களினதும் ஒழுக்க, உளரீதியான, அத்துடன் உடல் நலனை மேம்படுத்தல் ; அத்துடன்

(ஊ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளைப் புரிதல்.

*கல்லூரிகளின தும் சபையின தும் பணியாட் டொகுதி.*

10. (1) சபையானது அதன் பணிகளை நிறைவேற்றுவதில், அதற்கு உதவியளிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான, அத்தகைய பணியாட் டொகுதி நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) கல்லூரியின் தலைவர் அவரது பணிகளை நிறைவேற்றுவதில், அவருக்கு உதவியளிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான, அத்தகைய கல்விசார் பணியாட்டொகுதியும், கல்விசாராத பணியாட்டொகுதியும் ஒவ்வொரு கல்லூரிக்கும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

*சபையின் தத்துவங்களைப் பிரதான ஆணையாளருக்கு அல்லது சபையின் ஏதேனும் குழுவுக்குக் கையளித்தல்.*

11. (1) சபையானது, அதன் தத்துவங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள் எவற்றையும் பிரதான ஆணையாளருக்கு அல்லது சபையின் ஏதேனும் குழுவுக்குக் கையளிக்கலாம்.

(2) எந்தப் பிரதான ஆணையாளருக்கு அல்லது ஏதேனும் குழுவுக்கு, ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்பட்டதோ, அந்தப் பிரதான ஆணையாளர் அல்லது அந்த ஏதேனும் குழு, சபையின் பணிப்புரைகளுக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைவாக அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

*கல்லூரிகளின் கல்வித் தத்துவங்கள்.*

12. இரண்டாம் பிரிவின் ஓராம் உட்பிரிவின்கீழ் (அ) என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட கல்லூரி ஒவ்வொன்றும், பின்வரும் கல்வித் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும், பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின் கீழ், கற்பித்தல் தகைமைகளாக அங்கீகரிக்கப்பட்டவையான பட்டங்களையும், திப்புளோமாக்களையும் ஏனைய கல்விச் சிறப்புக்களையும் வழங்குவதற்கு இட்டுச் செல்லும் கற்கைநெறிகளையும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(ஆ) நிறுவகத்தின் ஒருப்பாட்டுடனும், அதன் கண்காணிப்பின் கீழும், அத்தகைய பட்டங்களையும், திப்புளோமாவையும், கல்விச் சிறப்புக்களையும் வழங்குவதற்காக, நிறுவகத்தால் விதித்துரைக்கப்பட்ட தாரதரங்களைப் பெற்றுள்ள கல்லூரி மாணவர்களைக் கண்டறியும் நோக்கங்களுக்காகப், பரீட்சைகளை நடாத்துதல்.

*பிரதான ஆணையாளர் அரசின் சார்பில் ஒப்பந்தம் செய்தல்.*

13. (1) ஏதேனும் கல்லூரியின் நோக்கங்களுக்கான ஏதேனும் ஒப்பந்தம், அரசின் சார்பாகப் பிரதான ஆணையாளரால் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கையில், பிரதான ஆணையாளரானவர் சபையின் பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவாதல் வேண்டும்.

14. (1) இந்தச் சட்டமானது நடைமுறைக்கு வருந்தேதியன்றும் அல்லது அதன் பின்னர், இந்தச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்று தவிர்ந்த வேறு கல்வி நிறுவனமெதுவும், " கல்விக் கல்லூரி " என்னும் சொற்களைக் கொண்ட, பெயரொன்றினால் அல்லது பெயரின்கீழ் தாபிக்கப்படுவதோ அல்லது பேணப்படுவதோ ஆகாது. " கல்விக் கல்லூரி " என்னும் சொற்களின் பயன்பாடு மீதான மட்டுப்பாடு.

(2) ஏதேனும் கல்வி நிறுவகம் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் முரண்பாடொன்று உள்ளவிடத்து, ஆளும் அதிகாரசபை அல்லது அந்த நிறுவகத்தின் உரிமையாளர் தவறொன்றுக்குக் குற்றவாளியாவதுடன், நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர், " கல்விக் கல்லூரி " என்னும் சொற்கள் அதன் பெயராக அல்லது அதன் பெயரின் பகுதியாகப் பயன்படுத்தப்பட்ட தேதியின் பின்னர், ஒவ்வொரு நாளுக்கும், ஆயிரம் ரூபாக் குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

15. (1) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் அரசாங்கத்தால் தாபிக்கப்பட்டு பேணப்பட்டு வந்த கல்லூரி ஒவ்வொன்றும் இந்தச் சட்டத்தில் முரணானது எது எவ்வாறாயிருப்பினும், அந்தத் தேதியிலிருந்து இரண்டு மாதகாலமொன்றுக்குப் பேணப்படுதல் வேண்டும். உளதாயுள்ள கல்விக் கல்லூரிகள் தொடர்ந்திருந்துவருதல்.

(2) இரண்டாம் பிரிவின்கீழான கட்டளை மூலம் தாபிக்கப்பட்ட கல்விக் கல்லூரிக்கு எந்தக் கல்லூரியானது பின்வழி வந்ததாக உள்ளதோ, அந்த ஒராம் உட்பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட கல்லூரி, ஏதேனுமிருப்பின், அதை, அக்கட்டளை குறித்துரைத்தல் வேண்டும்.

16. (1) பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும், அவை தொடர்பாகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் அல்லது எது தொடர்பாகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :— ஒழுங்குவிதிகள்.

(அ) விதித்துரைக்கப்படவேண்டிய கருமங்கள் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டனவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டனவோ அக்கருமங்கள் ;

(ஆ) கல்லூரியின் பணியாட்டொகுதியினதும், மாணவர்களினதும் பொதுநலன் ;அத்துடன்

(இ) சபை அலுவல்களின் நிருவாகம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவில், அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டு வரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத எதேனும் ஒழுங்குவிதி அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதன் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட எதேனும் ஒழுங்கு விதி எத்தேதியன்று அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்பட்டதோ, அத்தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல். 17. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி—

"நிறுவகம்" என்பது, 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசியக் கல்வி நிறுவகம் என்று பொருளாகும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*